

மதுரை மாநகர் மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினரும் மாமன்ற உறுப்பினருமான ம.ஜெயராம் அவர்களின் சகோதரர் முனைவர் மா.ராஜாராம் மகன் ஆர்.கெவின்குமார் – எஸ்.சந்தியா திருமண விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.மூர்த்தி மாவட்ட செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ. சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்தினர். உடன் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள் உள்ளனர்.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ்

### தமிழ்நாட்டிற்கான நிலுவை ரூ.2839 கோடி குறித்து

# ஒன்றிய ஊரகத் துறை அமைச்சர் தெரிவிக்காதது ஏன்?

## அமைச்சர் ஐ.பெரியசாமி சமூக வலைத்தளப் பதிவு!

சென்னை, மார்ச் 13–

தமிழ்நாட்டிற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய தொகை ரூ.2839 கோடி இன்னமும் நிலுவையில் இருக்கிறது. அதைப் பற்றி ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் தெரிவிக்காமல் நாடாளுமன்றத்தில் மக்களை தவறாக வழிநடத்தும் கருத்தை தெரிவிக்கிறார் என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:–

தமிழ்நாட்டிற்கு ஆய்வுக்கு வந்த போது தனது கூட்டத்தில் நான் பங்கேற்கவில்லை என்று சமீபத்தில் ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கூறியிருக்கிறார். அவருக்கு சில தகவல்களை தெரிவிக்க வேண்டியது எனது கடமை.



இந்தியாவிலேயே ஒன்றிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை தமிழ்நாடு தான் சிறப்பாக செயல்படுகிறது.

MGNREGSகீழ் தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர்களுக்கு கடந்த செப்டம்பர் முதல் ஒன்றிய அரசினால் வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவைத் தொகை 2,839கோடி ரூபாயை விடுவிக்கக் கோரி தமிழ்நாட்டின் முதலமைச்சர் கடிதம் எழுதியதற்கும்,எங்கள் மாநில நிதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர் @KanimozhiDMK அவர்களும் நேரில் வலியுறுத்தியதற்கும் பதில் என்ன? இதையெல்லாம் மறைத்து, நாடாளுமன்றத்தில் நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்தும்படி ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார் ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

அவர் தமிழ்நாடு வந்தபோது,குமரியில் வள்ளுவர் சிலையின் வெள்ளிவிழா அரசு நிகழ்ச்சிக்காகச் சென்றிருந்தேன். ஆனாலும் அவருடன் தொலைபேசியில் உரையாடி, தமிழ்நாட்டின் கோரிக்கைகளை நான் முன்வைத்ததை அவர் ஏனோ மறந்து விட்டது ஆச்சர்யமளிக்கிறது. துறையின் கூடுதல் தலைமை செயலாளர் நேரில் சென்று அவரை சந்தித்துப் பேசியதையும் கூட அறிவார். இது தவிர, காணொலி வாயிலான ஆய்வுக்கூட்டங்களிலும் நான் அவருடன் கலந்து கொண்டுள்ளேன்.

இருப்பினும் தமிழ்நாட்டுக்குரிய நிதியை விடுவிப்பதைப் பற்றி வாய்திறக்காமல், திட்டமிட்டு நான் ஏதோ சொந்தப்பணிக்காகத் துறை ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பதைப் போல பேசியுள்ளது அவர் வகிக்கும் பதவிக்கு உகந்ததல்ல!

இந்த கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுட்டெரிக்கும் வெயிலில் தங்களது உடல் உழைப்பை தந்து விட்டு ஊதியத்திற்காக காத்துக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் சம்பள பாக்கியை வழங்குவதில் இதே ஆர்வத்தை அவர் காட்டியிருந்தால் நாம் பாராட்டியிருப்போம்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

12-03-2025



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. அதிகரிக்கும் பயணிகள் கூட்டம் குறைக்கப்படும் இரயில் பெட்டிகள் ஒன்றிய அரசின் நோக்கம் என்ன?**

**கனிமொழி கருணாநிதி**



உத்தரபிரதேசத்தில் நடக்கும் கும்பமேளாவில் கலந்து கொள்வதற்காக சென்ற பக்தர்கள் இரயில் நிலையங்களில் கூட்ட நெரிசலில் சிக்கி இறந்தது, போதிய இரயில் வசதிகள் ஏற்பாடு செய்யாததால் பயணிகள் கடும் அவதிக்குள்ளானது, கோபத்தில் இரயில் பெட்டிகள் உடைக்கப்பட்டது என இரயில்வே துறையின் மிக மிக அவலமான காலமாக தற்போதைய ஒன்றிய அரசின் காலம் மாறிவருகிறது.

சிறப்பு நாட்கள் மட்டுமின்றி சாதாரண நாட்களிலும்கூட அண்மை காலமாக இரயில்களில் கூட்ட நெரிசல் அதிகமாவதால் பயணிகள் அவதியுறுவதை தடுக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு பதிலாக ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் முன்பதிவு இல்லாத பொதுப் பெட்டிகள் மற்றும் இரண்டாம் வகுப்பு பெட்டிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இது அடித்தட்டு மற்றும் நடுத்தர வர்க்க மக்களுக்கு ஒன்றிய அரசு இழைக்கும் துரோகம் என திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி எம்.பி. மக்களவையில் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் கடந்த பத்தாண்டுகளில் பொதுப் பெட்டிகள், இரண்டாம் வகுப்பு மற்றும் ஏசி பெட்டிகளின் எண்ணிக்கை கூடிய அல்லது குறைந்த விவரங்களும் கடந்த 2024-2025 மற்றும் நடப்பு நிதியாண்டில் எத்தனை பெட்டிகள் புதிதாக உருவாக்குவதற்கு இரயில்வே அமைச்சகம் திட்டமிட்டுள்ளது என்கிற தகவல்களையும் வெளியிட கேட்டுள்ளார்.

**2. மூத்த குடிமக்களுக்கு கட்டணமில்லா மருத்துவம்!**

**எம். எம். அப்துல்லா**



70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு விரிவான சுகாதார காப்பீடு வழங்க திட்டம் வகுக்க வேண்டும் என மாநிலங்களவையில் திமுக எம்.பி. எம். எம். அப்துல்லா கோரிக்கை வைத்துள்ளார்.

இதற்கு முன்பே ஏதேனும் சுகாதார காப்பீட்டுத் திட்டங்கள் முன்மொழியப்பட்டிருந்தால் அதன் காப்பீடு, சலுகைகள் மற்றும் நிதி தாக்கங்கள் குறித்த விவரங்கள் மற்றும் அத்தகைய திட்டங்களை செயல்படுத்துவதற்கான காலக்கெடு முதலியவற்றை வெளியிட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் இந்தத் திட்டங்களின் கீழ் தனியார் சுகாதார வழங்குநர்களை நெட்வொர்க்கில் சேர்க்கவும் அதற்கான அளவுகோல்களை வரையறை செய்யவும் வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**3. பல்வகை மாதிரி போக்குவரத்து பூங்காக்களின் நிலை என்ன?**

**இரா.கிரிராஜன்**



நாட்டில் பொருளாதார மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட பல்வகை மாதிரி போக்குவரத்து பூங்காக்கள்(MMLP) திட்டத்திற்கு தமிழ்நாட்டில் பொருத்தமான இடங்களை ஒன்றிய அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதா என கேட்டு மாநிலங்களவையில் திமுக எம்.பி. ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்திட்டத்தின்கீழ் முன்மொழியப்பட்ட வசதிகள், திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து ஒதுக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட நிதிகளின் விவரங்கள், இத்திட்டத்தினால் பொருளாதார வளர்ச்சியில் எதிர்பார்க்கப்படும் தாக்கம் மற்றும் திட்டத்தின் செயல்திறனைக் கண்காணித்து மதிப்பிடுவதற்கான வழிமுறைகள் போன்றவைகளையும் அவர் கேட்டுள்ளார்.

**4. சுங்கச் சாவடிகளை மூட வேண்டும்!**

**பி. வில்சன்**



சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறையின்கீழ் தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள திட்டங்களின் விவரங்கள், அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி, அத்திட்டங்கள் நிறைவுபெற எதிர்பார்க்கப்படும் காலக்கெடு போன்ற விவரங்களை அறிவிக்க வேண்டும் என திமுக எம்.பி. பி. வில்சன் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

சென்னை முதல் பெங்களூரு வரையிலான விரைவுச் சாலை திட்டம் நிறைவுறுவதில் தாமதம் ஏற்படுவதை குறிப்பிட்டு அதை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுங்கச் சாவடிகளை அகற்றிவிட்டு ஒரு முறை ஒரு சுங்கக் கட்டணம் எனும் அனுமதிச்சீட்டு முறையை அறிமுகப்படுத்துவதால் பயணிகளுக்கு போக்குவரத்து சிரமங்கள் குறையும். அதற்கான சாத்தியங்களை ஆராய வேண்டும்.

நாடு முழுவதும் சுங்கச் சாவடிகளில் முதலீடு செய்யப்பட்ட தொகை மற்றும் வசூல் செய்யப்பட்ட தொகை பற்றிய வெள்ளை அறிக்கை வழங்க வேண்டும்.

ஏற்கனவே மூதலீடு செய்த தொகையை சுங்கக் கட்டணங்கள் மற்றும் NHAI மூலம் பெறப்பட்ட சுங்கச் சாவடிகளை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை! ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. முன்னிலை! சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில்,

# ‘தமிழ்நாடு வெல்லும்’ என்ற தலைப்பில் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம்

## அமைச்சர் தங்கம் தென்னரசு, –வண்ணை அரங்கநாதன் கண்டன உரை



சென்னை, மார்ச் 13 –

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில் நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாடு அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் மோடி அரசின் அநீதியை மக்களிடம் கொண்டு சென்று அதன் பேரபத்தை எடுத்து கூறவேண்டும் என்றும், தொகுதி மறுசீரமைப்பினால் ஏற்படும் பாதிப்புகளை மக்களிடையே கொண்டு செல்லும் வகையிலும், தமிழ்நாடு முழுவதும் கண்டன பொதுக்கூட்டங்களை நடத்த வேண்டும் என்ற கழகத் தலைவரின் கட்டளையை ஏற்று, இந்துசமய அறநிலையத் துறை அமைச்சரும், மாவட்ட செயலாளருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. பகுதி செயலாளர்கள்: டி.எஸ்.பி.. ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில்,

நிதி மற்றும் சுற்றுச்சூழல் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் கழக சொற்பொழிவாளர் வண்ணை அரங்கநாதன் ஆகியோர் ஒன்றிய அரசின் கொடுமைகளையும், மறுசீரமைப்பால் ஏற்படும் பாதிப்புகளையும் எடுத்து சொல்லி கண்டன உரையாற்றினர்.

இக்கூட்டத்தில், தலைமையினால் வழங்கப்பட்ட குறிப்பாக அனைத்து கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும், மறுசீரமைப்பால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துக்கூறும் காணொளியை எல்.இ.டி திரையில் மக்கள் முன்னால் திரையிடப்பட்டும், துண்டு பிரசுரங்களை மக்களுக்கு வழங்கியும் 11 பக்க பவர்பாய்ண்டு பிரிண்ட் எடுத்து பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மேயர் பிரியாராஜன், பி.கே.மூர்த்தி, பகுதிச் செயலாளர்கள்: ஐ.சி. எப்.வ. முரளிதரன், வே.வாசு, கூ.பி.ஜெயின். தொகுதி பார்வையாளர் சன்.முனியாண்டி, ஜி.சாந்தகுமாரி எம்.சி., எல்.பி.எஃப்.மோகன், பூர்ணிமா எம்.சி., ஜீ.வி.நாகவள்ளி எம்.சி., து.ஆயிரம் கு.கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் க. பொற்கொடி எம்.சி., எஸ்.உமா எம்.சி., உஷாநாகராஜ் எம்.சி. எம்.இ.சேகர் எம்.சி. மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், க.முரளிபாபு அ.செல்வம், க.கதீஜா மா.ரமேஷ், நடராஜன், செல்வராஜ், கதிரவன் து.ஜெகநாதன் பி.ஆர்.இளங்கோவன் பா. பொற்செழியன், ராமு, நடராஜன், து.செல்வராஜ், கவிதா செல்லதுரை சங்கர்

• வட்டச் செயலாளர்கள் வி.ரவீந்திரன், பு.வீரா வெ.இராதாகிருஷ்ணன் மு.இரகு த.கண்ணபிரான், எம். கமல் , சீனிவாசன், எம்.இ.சேகர் , நா.நெப்போலியன் ஆர். டீக்கா சண்முகம், சுந்தர்ராஜன் லோகநாதன் மோகன்குமார், விஜயகுமார் த.வ.லால் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் பி.வி. மூர்த்தி, பொன்.நவராஜ்ரவி, க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி, எம்.ஹரி கிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி ஆ.இரா, அருண் கோ.சேகர்லால் பா.மதி ஜீவா, குப்புசாமி, சேதுராமன், பாஷ்கரன், சுரேஸ்பாபு, ஜெயராமன், மதியழகன், சவரிமுத்து, ராஜ்குமார், கோதண்டன், இன்பசேகரன் ஆகியோரின் வரவேற்பில் நடைபெறுகிறது. 87வது வட்ட கழக செயலாளர் பிரகாஷ்குமார் நன்றி கூறினார்.

### வில்லிவாக்கம் மேற்குப் பகுதி – எஸ்.கே.பி. தீபக்குமார் தந்தை

# எஸ்.கே. பொன்னுவேல் மறைவு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் அஞ்சலி!



சென்னை. மார்ச் 13–

சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதி எஸ்.கே.பி. தீபக்குமாரின் தந்தையும் முன்னாள் மாவட்டப் பிரதிநிதியுமான எஸ்.கே.பொன்னுவேல் 11.03.2025 அன்று இரவு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு அவரது உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்!

அதுபோது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் மேற்கு பகுதி கழக செயலாளர் கூ.பீ.ஜெயின் , 104வது மாமன்ற உறுப்பினர் டி.வி. செம்மொழி, வில்லி வாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு மற்றும், 99வது மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி, பா.இளையா மற்றும் வட்ட கழக செயலாளர்கள் சொ.முருகேசன், லோகுபாபு.மா. அகிலன் , தீனதயாளன், ஜானி, சுகுமாரன், பகுதி கழக , வட்ட கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் மறைந்த எஸ்.பொன்னுவேல் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (12.03.2025) அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு வேலங்காடு மயானத்தில் இறுதி நிகழ்வுகள் நடைபெற்றன.




சென்னை வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ் நாடு போராடும் – தமிழ் நாடு வெல்லும், ஒன்றிய அரசுக்கு எதிராக நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் நாஞ்சில் சம்பத் உரையாற்றினார். உடன் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### ஸ்ரீராமுலு– தலைமையில் சென்னை கிழக்கு மாவட்டத்தில் முதல்வரின் மனித நேய நாள்:

# புகழரங்கம்! கல்லூரி மாணவ - மாணவிகளுக்கு நல உதவிகள்!

## அமைச்சர்கள் கோவி.செழியன் – பி.கே.சேகர்பாபு வழங்குகின்றனர்

சென்னை, மார்ச் 13 –

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 21, கல்லூரி மாணவர் சிறந்தோங்கட்டும்! கழகத்தலைவரின் புகழ்பாடட்டும்!! எனும் தலைப்பில் துறைமுகம் மேற்கு பகுதியில், கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் உபகரணங்கள் வழங்கும் விழா நாளை 14.03.2025 வெள்ளி அன்று, மாலை 6.00 மணியளவில், சென்னை, சௌகார்பேட்டை, திருபள்ளி தெரு, சிவாஞ்சி ஜெயின்பவனில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் மண்டலக்குழுத்தலைவர் ப.ஸ்ரீராமுலு தலைமை வகிக்கிறார். மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி, எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம். தேவன், இசட். ஆசாத், என்.பி.எம். சேக்அப்துல்லா, எல்.சம்பத்குமார், பி.விஜய குமார், இரா.கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், M.வினாயகம், எம்.இப்ராஹிம்கனி, பா.பிரதீப்குமார் முன்னிலை வகிக்கின்றனர்.

மே.ஜனார்தனன், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், வி.ராம மூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், சேம்பாக்கம் வே.பா.பிரபாகரன், என்.சத்திய நாராயணன், எம்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், கதிரவன்(எ) ராஜா, எம்.பரத்கமா, கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், வெ.பரிமளம், ராஜேஷ்ஜெயின், நவின் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் சார்பாக, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் உபகரணங்களை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில் மேயர் பிரியா ராஜன், எம்.எல்.ஏ.க்கள் ப. தாயகம்கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல் மற்றும் கே.ஏகப்பன், கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, எம்.சந்துரு, பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம்.நாதன், சங்கரிநாராயணன், க.மணிமுடி, வே. உமாகாந்த், பருதிஇளம்சுருதி, கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன், கூ.பீ. ஜெயின், சரிதாமகேஷ்குமார், சொ.வேலு, ஜி.சாந்தகுமாரி, ஐ.சி.எப்..வ. முராளிதரன் எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், வே.வாசு, செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், எஸ்.பன்னீர்செல்வம் கோ. மணி, துளசிங்கம், பி.உதயசங்கர், ரமேஷ்(எ) நிலகண்டன். செம்மொழி, சாவித்திரிரராகவன், ஏ.பி.பூர்ணிமா, ஆ.நிர்மலாதேவி, டி.லோகேஷ், J.பால முருகன், க.வினோத், பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.எஸ்.சங்கர் நானா, வானவில்விஜய், நா.துலுக்கானம், எல்.பி.எப். மோகன், தோமோதரன், சுதாதீனதயாளன், ராஜேஷ்வரிஸ்ரீதர், துரைகண்ணன், ஜி.வி.நாகவள்ளி, மா.அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம், ஆர்.ஸ்.சித்திக், எம்.பெரோஸ் கான், லண்டன் க.முருகன் எல். எழில்அரசு, ஜி.மாசிலாமணி, சரவணக்குமார், எம்.நாராயணன், முருகவேல், வி.அசோக் குமார், டி.எஸ்.சேகர், நா.ரஞ்சித், விஜயாலயன், மதன், செந்தில்குமார், வி.சங்கர், எஸ். கதிர்வேலு, ஆர்.தங்கமணி A. மதுசூதனன், குமார், டி. சுபாஷ் சந்திரபோஸ், ஹாஜி முகமது அலி, சேகர்(எ) பிரஸ்சேகர், ஆடியோ கே.சம்பத், எம்.. சுரேஷ், பி.சகாயராஜ், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பா.கதிரவன், மா.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# பல்லவபுரத்தில் பொதுக்கூட்டம்! மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ் காந்தி சிறப்புரை!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் நல உதவிகள் வழங்குகிறார்!

காஞ்சிபுரம், மார்ச் 13 –

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72–வது பிறந்த நாளையொட்டி பல்லவபுரத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர் ராஜீவ்காந்தி சிறப்புரையாற்றுகிறார் அமைச்சர் தா.மோ.அன்பரசன் நல உதவிகள் வழங்குகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் கழகத் தலைவர் – தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72–வது பிறந்த நாளையொட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கி – மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (13.3.2025) மாலை 6 மணிக்கு கண்டோன்மெண்ட் பல்லவபுரம் பேருந்து நிலையம் அருகில் மாவட்ட அமைப்பாளர் எல்.பிரபு தலைமையில் நடைபெறுகிறது.

கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு, பம்மல் தெற்குப் பகுதிச் செயலாளர் வே.கருணாநிதி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கு. கலாநிதி, விக்கி (எ) விக்னேஷ்வரன், வெ.சங்கீதா, எஸ்.ஜெகதீப், டி.ஜெகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்

இக்கூட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர் ராஜீவ் காந்தி, தலைமைக் கழகப் பேச்சாளர் செயங்கை தாமஸ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகிறார்.

கழக தீர்மானக் குழுச் செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, பல்லவபுரம் இ.கருணாநிதி, வரலட்சமி மதுசூதனன், மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர் மூர்த்தி, பொருளாளர் வெ.விசுவநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ.மனோகரன், மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, கோ.காமராஜ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள், கழக அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டுசிறப்பிக்கின்றனர்.

முடிவில் கன்டோன் மெண்ட் நகர மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி. மகேஷ் நன்றி கூறுகிறார்.



முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் சாலவாக்கம் ஒன்றியம் அனம்பாக்கம் ஊராட்சியில் கிரிக்கெட் போட்டியினை துவக்கி வைத்தார். ஒன்றிய கழக செயலாளர் டி.குமார் தலைமை தாங்கினார், இதில் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொண்டனர்.